

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## அன்புள்ள இருதயம், எந்நிலையிலும் ஓசைப்படுவதில்லை!

பிறருக்கு நன்மை தரும் பால் நிறைந்த ஓர் வெண்கல பாத்திரம் அல்லது அன்பென்னும் நற்குணத்தால் நிறைந்தவர்கள் 'ஓசை' படுவதேயில்லை! எத்தனை நெருக்கங்கள் மோதினாலும், அதில் 'ஓசையான' ஆத்திரங்கள் எழுவதில்லை! ஏனெனில், அவர்களின் பாத்திரம் அன்பினால் நிறைந்திருக்கிறது!!

உள்ளே தங்கள் இருதயத்தில் அன்பில்லாத "வெறும் பாத்திரம்" கொண்டவர்கள், எவ்வளவுதான் "தூதர் பாஷை" போன்ற தேவபக்தியான வார்த்தைகளைப் பேசினாலும்.... அது, வெறும் "வெண்கல ஓசையாகவே" இருக்கும்! என 1கொரி.13:1 நம்மை விழிப்பூட்டுகிறது! 'அனுதினமும்' தன் சிலுவை எடுத்து, சுயத்தை வெறுத்து வாழ்பவனே, தன் இருதயத்தை, அன்பென்னும் தெய்வ நற்குணத்தால் நிறைத்திடுவான்! இனியும் 'வெறுமையில்' காலத்தை வீணாக்காமல், சிலுவையின் பாதையில் உண்மையாய் நடந்து, நம் இருதயத்தை தெய்வ அன்பினால் நிறைத்திடுவோமாக!!

*-tr*

டிசம்பர் – 2019

பெட்டகம் 21

பரல்கள் 12



## சபையில் 'மாயமற்ற அன்பு' நிலைத்திருக்கட்டும்!

குரு அளித்த பயிற்சியை மேற்கொள்ளாமல் "ஆக்கினை செய்யும் உத்திரத்தோடே" தன் சகோதரனை நெருங்கி, "சகோதரனே நான் உன் துரும்பை எடுத்துப்போடட்டும்!" என நீ எப்படி கூற முடியும்? இவ்வாறு அவனை "சகோதரனே...." என அழைப்பதும், ஆங்கில மொழிபெயர்ப்பின்படி "சினேகிதனே....." என்று அழைப்பதும் கூட "நீ எப்படிச் சொல்லலாம்?" என்றே இயேசு மறுத்தார்! ஆம், குற்றவாளியாய் தீர்க்கும் உத்திரத்தை எடுத்துப் போடாமல், "சகோதரனே....." என்று அழைத்து சொல்லியவர்களை "மாய்மாலக்காரன்!" என்றே அழைத்தார் (வசனம்.42). கெத்செமனேயில் தன்னைக் காட்டிக்கொடுத்த யூதாஸை, "சினேகிதனே!" என்று இயேசு அழைத்தார்..... ஆனால், அதில் மாய்மாலம் இல்லை! அது ஏனென்றால் "நான் ஒருவரையும் ஆக்கினைத்தீர்ப்பு செய்ய வரவில்லை!" என இயேசு திட்டமாய் கூறினார் (யோவான்.3:17). ஆம், இயேசுவிடம் 'ஆக்கினைதீர்ப்பின் உத்திரம்' இல்லவே இல்லை!

யூதாஸ் கெட்டுப்போனான், அது ஏனென்றால், "கேட்டின் மகன் தானாய் கெட்டுப் போனான்" (யோவான்.17:12), அவ்வளவுதான்! இயேசு அவனை ஆக்கினைக்குள்ளாய் தீர்க்கவில்லை! பழிதீர்க்கவும் இல்லை!

நாமும், நம் குடும்பமும், நம் சபையும் நலம் பெற 'நம் கண்ணின் உத்திரம்' அகற்றி ஜீவிப்போமாக! ஆமென்.

*-Ed*


### 2020 'பரலோக பொக்கிஷங்கள்'

*வருட சந்தா ரூ.**150/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு* **டிசம்பர் 20-ம் தேதிக்குள்** *அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள்* **'புதிது'** *என்று குறிப்பிடவும். நன்றி!*

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்! சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கிகணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** IndianBank-Koodal Nagar Branch,
A/c no: **502087685** IFSC Code: **IDIB000K150** (வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாச தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள், 207A- Zaheer Husain Street, Koodal Nagar,
(Thathaneri P.O.), MADURAI - 625 018, S.India. Cell: 9843049935 Ph (O) 0452 - 2662306,
**Email: rathnakumar.t@gmail.com** *தமிழ்வலைதளம்*: **paralogapokkishangal.com, tamil.cfcindia.com**
**You Tube : paralogapokkishangal**

## இறுதியாக, இந்த மூன்று புத்திமதி கேளுங்கள்!

*பவுல், இளைஞனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, மூன்று முக்கிய புத்திமதிகளைக் கூறினார். அது, இன்றுள்ள அனைத்து வாலிபர்களுக்கு மாத்திரமல்லாமல், நம் எல்லோருக்கும் ஏற்றதாயிருக்கிறது!*

*1.* ***தேவனுக்கென்று 'அக்கினியாய்' இருந்திட நாடுங்கள்!***

*"நான் உன் மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான* **தேவ வரத்தை** *உனக்கு நினைப்பூட்டுகிறேன்" என்றார். பரிசுத்தாவி, பயமுள்ள ஆவி அல்ல! பவுல் தீமோத்தேயுவுக்கு புத்தி சொல்லி, அவர் பெற்ற வரத்தை அனல் மூட்டி எழுப்பவும், அந்த அக்கினியை காத்துக் கொள்ளவும் கூறினார்! இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்னவென்றால், இயேசு நம்மை பரிசுத்தாவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுத்த போதிலும் (மத்தேயு.3:11),* **அந்த அக்கினி எப்பொழுதும் எரிந்திட** *நாமும் செய்ய வேண்டிய பகுதி உள்ளது என்பதேயாகும்! தேவன் அக்கினியை மூட்டுகிறார்! நாமோ, அதில் எண்ணெய் வார்ப்பது போல, தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாய் ஒப்புக்கொடுக்கும் அர்ப்பணத்தை நம் ஜீவியத்தில் தொடர்ந்து செய்து வர வேண்டும்!*

> தேவன் உங்களை ஒருமுறை அபிஷேகத்தினிமித்தம், இப்போது நீங்கள் ஒன்றும் செய்யாமலே இருந்து கொண்டு "ஒருமுறை அபிஷேகம் பண்ணப்பட்டவன், எப்போதும் அபிஷேகம் பண்ணப்பட்டவன்!" என இருந்து விடக்கூடாது. இன்று அநேகர் தீமையாய் கூறும் "ஒருமுறை இரட்சிக்கப்பட்டவன், என்றைக்கும் இரட்சிக்கப்பட்டவன்!" என கூறும் வீழ்ச்சிக்கு ஒப்பாகவே, இதுவும் ஒரு வீழ்ச்சியாகும்!

*'மெய்யாகவே' தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஜனங்களைப் பார்த்திருக்கிறேன்! ஆனால் அவர்களோ, ஒரு வருடத்திற்குப் பின்பு,* **ஆவிக்குரிய மரணத்தை** *அடைந்து விட்டார்கள். அவர்களிடமிருந்த அக்கினி, அவர்களை விட்டு போய்விட்டது! உலக ஆசாபாசங்கள், பெருமையும் உள்ளே பிரவேசித்து அந்த அக்கினியைப் பறித்துக் கொண்டது. இப்போது அவர்கள் பணத்திற்குப் பின்பாக ஓடி, ஒரு சொகுசு*

வாழ்க்கையைப் பெற்றிருக்கிறார்கள்..... ஆனால், தேவனுடைய அக்கினியை இழந்துவிட்டார்கள்! அது மிக வருத்தமும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு ஏற்பட்ட பெரிய இழப்புமாயிருக்கிறது!

ஆகவேதான் பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும்போது "உன் மீது வந்து இறங்கிய அக்கினியை தொடர்ந்து எரியும்படி பத்திரமாய் காத்துக்கொள்! அந்த செயல், இப்போது உன்னையே சார்ந்ததா யிருக்கிறது. தொடர்ந்து எரியும்படி அந்த அக்கினியை நீ காத்துக் கொள்ளவில்லையென்றால், அது அவிந்து போய்விடும்! ஆகவே, அந்த **அக்கினி தொடர்ந்து எரியும்படி:** ஓர் நல்ல மனசாட்சி மூலமாகவும், தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்வது மூலமாகவும், தொடர்ச்சியாய் உன்னைத் தாழ்த்துவது மூலமாகவும், முழு இருதயமாய் தேவனைத் தேடுவது மூலமாகவும், பண ஆசையை விட்டு விலகியிருப்பது மூலமாகவும், பிறரிடம் வாக்குவாதம் செய்வதற்கு விலகியிருப்பது மூலமாகவும், இவ்வாறு..... அக்கினியை அவித்துப் போடும் எல்லா தீவினையிலிருந்தும் உன்னை காத்துக் கொள்! என எழுதினார்.

*2.* ***முழு இருதயங்கொண்ட விசுவாசிகளின் ஐக்கியத்தை நாடுங்கள்!***

இரண்டாவது புத்திமதியாக பவுல் தீமோத்தேயுவைப் பார்த்து, "நீயோ, பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே நீதியை அடையும்படி நாடு" எனக் கூறினார் (2தீமோ.2:22). அதாவது, நாம் பிரதானமாய் 'பரிசுத்தத்தை நாடும் ஜனங்களோடு மாத்திரமே' ஐக்கியம் கொள்ளவேண்டும் எனக் கூறினார். அப்போது மாத்திரமே, நாம் பாவத்திலிருந்து விலகி ஓடும்படியான உதவியை அந்த ஐக்கியத்திலிருந்து பெற்றிட முடியும்.

**இந்த பூமியில் நம்முடைய சிறந்த நண்பர்கள் என நாம் கருதுகிறவர்கள் "பரிசுத்த ஜீவியத்தை தங்கள் முழு இருதயத்தோடும் நாடுகிறவர்களாய்" இருக்க வேண்டும்!**

அநேக விசுவாசிகள் தரம் குறைந்த வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டு, தேவ பக்தியில் முழு விருப்பம் கொண்டிருப்பதில்லை. ஆனால் நாமோ, பரிசுத்த ஜீவியத்தை வாழ்வதற்கு துடித்து நிற்கும் ஜனங்களோடு மாத்திரமே, நம்முடைய அதிகபட்சமான நேரத்தை ஐக்கியத்திற்கென்று செலவழிக்க வேண்டும்!

ஒருவரிடம் 'தூய இருதயம்' இருப்பதாக நாம் எவ்வாறு அறியலாம்? 'இருதயத்தின் நிறைவிலிருந்தே ஜனங்கள் பேசுகிறார்கள்' என இயேசு கூறினார் (மத்.12:34). ஒருவன் எதைப்பேசுவதற்கு ஆசை

*கொண்டிருக்கிறானோ, அதை வைத்து, அந்த மனுஷனுடைய இருதயத்தில் நிறைந்திருப்பது என்ன? என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். ஒருவன், எப்போதுமே பணத்தையும், உலகப் பொருட் களையும் குறித்தே பேசிக்கொண்டு இருந்தால், அவனுடைய இருதயத்தில் "***பணத்தின் சிந்தையே***" நிறைந்திருக்கிறது. அதற்கு மாறாக, ஒருவன் 'அதிகபட்சமாய்' ஆண்டவரைக் குறித்தே பேச விரும்பினால், அவனுடைய இருதயத்தை நிறைத்திருப்பது என்ன என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்! "இயேசுவைப்போலவே மாறவேண்டும்!" என்ற வாஞ்சையைக் கொண்டவர்களோடு, நான் ஐக்கியம் கொள்ளவே விரும்புகிறேன். நாம் ஆண்டவரை நேசிக்கிறவர்களா யிருந்தால், அவரைக் குறித்து பேசுவதற்கே பிரியமுள்ளவர்களா யிருப்போம்! இதுவே, நாம் கர்த்தருக்கென்று செய்திடும் ஊழியம், வலிமையாய் இருப்பதற்கான இரகசியமாகும்!*

*3. **'தேவனுடைய தரத்தை' உயர்வாய் வைத்திருக்க நாடுங்கள்!***

*மூன்றாவது பவுல், "ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு" என தீமோத்தேயுவிடம் எச்சரித்துக் கூறிய புத்திமதியைப் பாருங்கள். ஆங்கில மொழி பெயர்ப்பின்படி "கிறிஸ்தவ ஜீவியத்தின் உயர்ந்த தரத்தை, ஒருக்காலும் குறைத்து விடாதே!" என்றே அர்த்தமாகும் (2தீமோ.1:13). இந்த புத்திமதி, நம் நாட்களில் முக்கியமாக, எல்லா கிறிஸ்தவ பிரசங்கிகளுக்கும் எவ்வளவு அவசியமா யிருக்கிறது! பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும்போது, வேத வாக்கியங்களில் காணப்படும் உன்னத தரத்தை ஒருவன் குறைத்து, அநேக ஜனங்கள் உன்னுடைய சபைக்கு வருவதற்கு வழி ஏற்படுத்தாதே! என்பதே அவருடைய புத்திமதியின் சாரமாகும்.* **உயர்ந்த தரத்தைப் பற்றிக்கொண்டிருக்கும் கொஞ்சமான ஜனங்களை** *நீங்கள் கொண்டிருந்தால், கர்த்தருடைய பார்வையில் நீங்களே ஓர் சிறந்த சபை என்பதை அறியுங்கள்! வேதவாக்கியத்தின் தரத்தை இழந்த அநேக ஜனங்களை விட 'கொஞ்ச ஜனங்களே' மேலானவர்கள்!*

> அதாவது, ஒத்தவேஷம் தரித்து, வேத வாக்கியங்களை அவமாக்கும் 300 ஜனங்களைவிட, 3 சீஷர்களைக் கொண்ட ஒரு சபை, மகா மேன்மை கொண்ட சபை மக்களாயிருப்பார்கள்!

*உண்மைதான், **300-** ஒத்தவேஷம் தரிக்கும் விசுவாசிகளைவிட, **3-** முழு இருதயம் கொண்ட சீஷர்கள், அவர்கள் வாழும் முழு கிராமத்தையும் கிறிஸ்துவுக்குள் ஈர்த்துக் கொள்ள முடியும்! இதுபோன்ற பாரமே, எந்த ஒரு உண்மையான தேவனுடைய ஊழியனும்,* **'தனக்குப் பின் வரக்கூடிய'** *அடுத்த சந்ததியைக் குறித்த*

*பாரமாய் கொண்டிருப்பான்! அதுவே, கிறிஸ்துவின் மெய்யான சரீரமான சபை!!*

*– சகரியா பூணன்*

---

**நம் குடியிருப்பின் எல்லைக்கு, அக்கறை காட்டும் ஆண்டவர்!**

*என் ஜீவிய காலசக்கரத்தில் 'தேவனே' ஓர் திருப்புமுனை ஏற்படுத்தியதைக் கண்டேன்! என்னோடு வசித்த பணிப்பெண்களில், மிக உண்மையான பணிப்பெண் என்னிடம் வந்து "நான் பர்னபாஸ் சமூக சேவகியாய்" செல்ல விரும்புகிறேன் என கேட்டாள். அந்த 'பர்னபாஸ் சேவகி' ஸ்தலம் ஜெனிவா நகரில் இருந்தது. அதைக் குறித்து ஜெனிவா பட்டணத்தில் வசித்த 'தந்தை - லா - கோம்பே' அவர்களிடம் தொடர்பு கொண்டு ஆலோசனை பெற்றேன். என் கணவரோடு இருந்த நாட்களில், தந்தை லா கோம்பேயை நான் சந்தித்தது, ஒரு பெரிய பக்தி விருத்தியாய் இருந்தது. ஆகவே 'கிருபைக்கு கீழ் உட்பட்ட தாசனாய்' நான் லா கோம்பே அவர்கள் மீது மதிப்பு வைத்திருந்தேன். அவருக்கு நான் கடிதம் எழுதுவதற்கு, தேவன் தந்த சந்தர்ப்பமாக இதைக் கண்டேன். என் பணிப்பெண் விரும்பிய 'சமூக சேவகி' ஊழியத்தை விசாரித்த அதே நேரத்தில், நான் தேவனுடைய கிருபையை விட்டு விலகி அவருக்கு நன்றி இல்லாமல் சோர்ந்துபோய் பின்மாற்றம் அடைந்ததையும், பின்பு நான் கதறி அழுது தோல்வியிலிருந்து மீட்கப்பட்டேன் என்பதையும் சேர்த்து எழுதினேன். அதற்கு அவர் பதிலும் எழுதியிருந்தார்:*

> அந்த பதிலில், "தோல்வி அடைந்தவன் மீண்டும் கிருபைக்குள் ஈர்த்துக் கொள்ளப்பட 'இயற்கைக்கு அப்பாற்பட்ட பேரொளியை' அவன் சந்தித்தால் மாத்திரமே மீண்டு வர முடியும். அதுபோன்ற பேரொளியை நீங்கள் பெற்றதும் ஒரு தெய்வ சிலாக்கியமே!" என குறிப்பிட்டிருந்தார்.

*அவர் எழுதிய அந்த வாசகம், எத்தனை உண்மை என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன்!*

*இச்சமயத்தில், என் பணிப்பெண் 'கிறிஸ்துவின் சேவகத்திற்குச்' செல்ல விரும்பியதைப்போல், நானும் ஜெனிவா செல்வதற்கு உந்தப்படுவதை தந்தை லா கோம்பே எழுதிய பதில் கடிதத்தின் மூலமாய் உணர்ந்தேன். ஜெனிவா பட்டணத்தில் புரோட்டஸ்டண்டு கிறிஸ்தவ மார்க்கத்தார் அதிகபட்சமாய் வசித்து வந்தார்கள். 'தேவனுக்கு சித்தமாயிருந்து' நான் இப்போது வாழ்ந்து வரும் உள்ளூர் ரோம கத்தோலிக்க சபையை விட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால், அதைக்குறித்து எண்ணிப் பார்த்து வருந்தினேன்.*

*இங்கேயே பிறந்து வாழ்ந்த என் அரண்மனை ஜீவியத்தில், என் கணவர், மாமியார் தொடங்கி உற்றார் உறவினர் வரை ஏராளமான நெருக்கங்கள் கொண்ட சிலுவை பாதையில் நான் கடந்து வந்தாலும், அவர்களோடிருந்த காலங்களில்,* **தேவனிடம் நான் கண்டடைந்த நெருங்கிய உறவை** *எண்ணிப் பார்த்து, சற்றே மனம் கலங்கினேன். ஆகிலும், தந்தை லா கோம்பே எழுதிய கடிதம் பளிச்சிட்ட:*

**"எதையும் நான் நம்பி சார்ந்து கொள்ளாமல் கர்த்தருடைய வழிக்கே என்னை ஒப்புவித்து விட வேண்டும்" என்ற பிரதிபலிப்பு, என் உள்ளத்தை ஆண்டு கொண்டது!**

*இந்த சிந்தை, என் இருதயத்திற்குள் மீண்டும் சமாதானத்தைக் கொண்டு வந்தது. என் மனதும் அமைதிப்பட்டது! நான் ஜெனிவா போவது தேவனுடைய சித்தமானால் "ஆகட்டும்" என என்னை அர்ப்பணித்தவுடன், "என் கரத்தை தேவன் பற்றிக்கொண்டதைப் போல்" உணர்ந்தேன்! இதே சமயத்தில் ஜெனிவாவிலிருந்த தந்தை லா கோம்பே அவர்கள் எழுதிய மற்றொரு கடிதத்தை நான் பெற்று, ஆச்சரிய மடைந்தேன். அந்த கடிதத்தில்: "நான் ஜெபித்துக் கொண்டிருந்த வேளையில், ஜெனிவாவில் நான் வசிக்கும் மாளிகை அருகில் நீங்களும் வந்து சேர்வீர்கள்" என்ற உணர்வு என் உள்ளத்தில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தலை ஏற்படுத்தியது! என ஆச்சரியத்தோடு எழுதியிருந்தார்! அவர் பெற்ற அதே ஆச்சரியத்தை நானும் பெற்று "ஓ தேவனே, இப்போது நான் உம் சித்தத்தை உறுதிப்படுத்தும்படி, தந்தை லா கோம்பே அவர்களின் கடிதத்தை* **ஓர் அறிகுறியாக** *காண்பித்ததற்கு நன்றி!" என தேவ சித்தத்தில் மன அமைதி கண்டேன். மேலும் "என் ஆண்டவரே நீரே நான் வாசம் செய்யும் நிரந்தர ஸ்தலமாயிருக்கிறீர்! ஆகிலும், இந்த உலகில் தற்காலிகமாக வாசம் செய்திடும் குடியிருப் பையும், நீர் முன் நின்று நடத்தித் தருவது என் உள்ளத்தை அதிகமாய் பரவசமடையச் செய்கிறது!* **நீர் நடத்தும் பாதையை** *நான் தெளிவாக கண்டுணரச் செய்தபடியால், உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்!" என நன்றி உள்ளத்தோடு ஜெபித்து பூரண இளைப்பாறுதல் அடைந்தேன்.*

*– மேடம் குயான்*

---

## ஆதி சபைகளின் வல்லமையே, இன்று நமக்கு வேண்டும்!

*இன்றைய கிறிஸ்தவத்தின் பெரும்பான்மை 'ஒரு அமைப்பில்' சிக்குண்டு, புதிய ஏற்பாட்டின் தரத்தை இழந்து வெகுதூரமாய் நிற்கிறது. தாங்களை உண்மையான சபை என்று சொல்லிக் கொள்பவர்களிடம்கூட "உலக-சமரசம்" தலைவிரித்தாடுகிறது!*

*இவர்கள் கட்டித்தழுவிய உலகத்திற்கு, நன்றாய் வெள்ளையடித்து வைக்கிறார்கள்! இதை பார்வையிட வந்த "கண் சொருகிப்போன விசுவாசிகள்" ஆஹா, ரொம்பவும் நன்றாக இருக்கிறது என கூறிக் கொள்கிறார்கள். இன்றைய கிறிஸ்தவத்தின் பரிதாப நிலையை ஏறெடுத்துப் பாருங்கள்! அங்கு, புதிய ஏற்பாட்டின் தரம் சீரழிந்து போனது.* **'உலக ஜீவியமே நடைமுறைக்கு ஒத்தது'** *என திரள் திரளாய் ஏற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். ஆவிக்குரிய சாரம் தொலைந்துபோய் "சமூகவாதிகளாய்"மாறிப்போய் கிடக்கிறது. தேவனோடு இணைந்த ஆராதனையின் வாசனையில், 'இன்றைய கிறிஸ்தவம்' இப்போது துர்நாற்றம் வீசுகிறது!* **இன்றைய சபைகளில், பரிசுத்தவான்கள் உருவாகவில்லை!** *வியாபாரமக்களின் மாதிரியே நல்ல மாதிரி என சபை எண்ணத்துவங்கிவிட்டது. சினிமாக்களில் தோன்றும் மனுஷனும், மனுஷியைப் போலவே இவர்களும் வேஷமிடத் தொடங்கி விட்டார்கள்! இவர்கள் நடத்திடும் மார்க்க சம்பந்தமான கிரியைகள் அனைத்தும், இன்றைய விளம்பரதாரர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாய் இருக்கிறது. பரிசுத்தவான்களென கூறிக்கொண்ட இவர்களின் வீடு 'சினிமா கொட்டகையாய்' மாறி விட்டது! வெளிவரும் புத்தகங்களில், ஆழமற்ற மேலோட்டமே காணப்படுகிறது! தெய்வீக பாடல்களுக்குப் பதிலாய் 'சினிமா ராகத்தில்' அர்த்தமே தெரியாமல் அவசர கோலத்தில் பாடும் பரிசுத்த குலைச்சலாய் காணப்படுகிறது!*

இவ்வளவு தீங்குகள் சபைகளில் தோன்றிய போதும், அதைக் குறித்த விழிப்பு அங்குள்ள யாருக்காவது ஏற்பட்டுள்ளதா? அதுவும் இல்லை! இவர்களின் கூடுகையில் புதியஏற்பாட்டின் கிறிஸ்தவம் சுருங்கிப்போய், மார்க்க கலை நிகழ்ச்சிகளும், மனுஷீக ஆரவாரமும் இடம் பெற்றிருக்கிறது!

*தன் சொந்த சீஷர்களை, "சிலுவை சுமந்திட" கிறிஸ்து அழைத்தார்! இன்றைய சபையோ, அவருடைய நாமத்தில் 'குஷி வாழ்க்கையை' விரும்புகிறது. கிறிஸ்துவோ, உலகத்தை வெறுத்து விடுங்கள்! என அழைக்கிறார். இன்றைய சபையோ,* **இயேசுவை ஏற்றுக்கொள்ளுங்கள்... இந்த உலகமே உங்களுக்குச் சொந்தம்!** *என கூவி அழைக்கிறது. பாடனுபவியுங்கள் என சிலுவைநாதர் கூப்பிட... இன்றைய நாகரீக வசதிகளை அனுபவியுங்கள்! என கேட்டின் பாதையில் நிற்கும் சபை அழைக்கிறது! சொந்த அபிலாஷைகளுக்கு மரணத்தை கொண்டுவாருங்கள் என அவர் அழைத்திட... இன்றைய கிறிஸ்தவமோ, உலகத்தில் உங்கள் பச்சை இலைகளைப் படர விடுங்கள்... அதில் எத்தனை நட்சத்திர குறியீடுகளை பெறமுடியுமோ*

அத்தனையும் பெற்று விடுங்கள் என அழைக்கிறது! கிறிஸ்துவோ பரிசுத்தத்திற்கு அழைக்கிறார்... இன்றைய கிறிஸ்தவமோ, ஈனமான சந்தோஷத்தை முன்வைத்து, பரிசுத்ததிற்கு மாசு கற்பிக்கிறது!

இப்படியெல்லாம் தேய்ந்துவிட்ட கிறிஸ்தவத்தில்தான் "கரங்கோர்த்த ஐக்கியம்" தோன்றுகிறது. இந்த ஐக்கியத்திற்கு இவர்கள் வைத்திருக்கும் தாரக மந்திரம் யாதெனில் "பரவாயில்லை, ஐக்கியத்திற்காக ஒத்துப்போக வேண்டியதுதான்!" என்பதுதான்!

மலைப்பிரசங்க பாக்கியவான்களின் பட்டியலில், இன்றைய கிறிஸ்தவம் இணைத்து வைத்திருக்கும் மற்றொரு பாக்கியவான் வரிசை யாதெனில் "ஐக்கியம் காக்க, எங்களிடம் என்ன நடந்தாலும் சகிப்பவன் பாக்கியவான்! அப்போது, அவர்கள் செய்திடும் யாதொரு தீமையும் ஒரு பொருட்டாக எண்ணப்படுவது இல்லை" என்பதுதான்!

**இதற்கு இன்னும் ஒருபடி மேலாய், "நமக்குள் சத்திய சம்பந்த வித்தியாசங்கள் ஏற்பட்டாலும் பரவாயில்லை, 'வித்தியாசங்கள் ஒழித்து' ஐக்கியத்தில் வளர்வோம்!" என்றே இன்றைய கிறிஸ்தவம் ஊளையிடுகிறது!**

சற்று சிந்தியுங்கள்... பொன் கன்றுக்குட்டி உருவாக்க அமைந்த நிர்வாகத்தோடு மோசே அமர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார் என உங்களால் சிந்திக்க முடிகிறதா? ஆனால் இன்றைய கிறிஸ்தவமோ அல்லது சீரழிந்து வரும் சபைகளோ, இதுபோன்ற செயலைத்தான் செய்கிறார்கள்!

சமாதானம் பண்ணுகிறவர்களுக்கு, தேவனுடைய ஆசீர்வாதம் உரைக்கப்பட்டது உண்மைதான்! ஆனால், இவ்வித முயற்சியில் ஈடுபடுபவர்கள், தங்களின் ஒவ்வொரு அடியையும் மிகக் கவனமாய் வைத்திட வேண்டிய காலம் இது! நீங்கள் எவ்வளவுதான் கூடி சமாதானம் பேசினாலும், இருளையும் ஒளியையும் நீங்கள் ஒருபோதும் இணைத்திட இயலாது. **ஆம், சில உத்தமங்களுக்கு சமரசம் என்பது ஒருபோதும் இல்லை!** ஒரு சபையில் 100 மார்க்கவாத கிறிஸ்தவர்கள் கூடி, மிக கவனமாய் ஒருவரோடொருவர் ஐக்கியத்தில் பின்னப்பட்டு விட்டால்... அதை 'சபையென்று' அழைத்திட முடியுமா? இது, செத்துப்போன 11 புருஷர்கள் கூடி "கால்பந்தாட்ட குழு" அமைத்ததற்கு ஒப்பானதே ஆகும்! இவர்களுக்கு இன்றும் என்றும் முதல் பிரதான அவசியமாய் இருப்பதெல்லாம் "ஜீவன்! தேவ பக்தியான ஜீவியம்!" மாத்திரமே ஆகும்! உயிரற்ற இவர்களின் குழு அல்ல!

இனிவரும் காலத்தில், கிறிஸ்தவத்தை அரித்துகொண்டிருக்கும்

*புற்றுநோய்கள் வெறுத்து ஒழிவதாக! புதிய ஏற்பாட்டின் மாசற்ற புனிதம் சபைகளில் தழைத்து ஓங்குவதாக! ஆமென்.*

*– A.W.டோசர்*

---

## ஒரு தீர்க்கதரிசி, மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவன்

*பல வருடங்களுக்கு முன்பாக* **கிரிகேரிமேன்டில்** *என்ற தேவ ஊழியன்* "**முற்றிலும் தள்ளப்படாமல்,** *ஒரு மனுஷனும் முழுமையாய் ஏற்றுக்கொள்ளப்படான்!" எனக்கூறிய வாசகம் மெய்யாகவே சத்தியம் நிறைந்ததாகும். 'தள்ளப்படுதல்' அதை அடுத்து 'ஏற்றுக்கொள்ளப்படுதல்' ஆகிய இரண்டு அனுபவங்களைக் குறித்தும் ஒரு தீர்க்கதரிசி கவனித்து நோக்குகிறான். அதுவே அவனுடைய தகுதியின் சின்னமாயிருக்கிறது!*

*ஒரு தீர்க்கதரிசி, 'சகஜமாகிவிட்ட' கற்புநெறி புரட்டலையும், ஆவிக்குரிய சமரசத் தன்மையையும் எதிர்த்து நிற்கிறபடியால், அவன் எப்போதும் பிரபல்யமற்றவனாகவே இருக்கிறான். ஆகவே ஒரு தீர்க்கதரிசியின் வலிமை, அவருடைய பிரபல்யமில்லாத அளவை சார்ந்தே உள்ளது. எனவேதான், ஒத்தவேஷம் என்பது, அவனிடம் கிஞ்சித்தும் இருப்பதில்லை!*

**ஒரு தீர்க்கதரிசி முற்றிலும் 'வேறு உலகத்தை' சேர்ந்தவன்:**

*அவன் முரண்பாட்டிற்கும், பகைக்கப்படுவதற்கும் உள்ளாகிறான்.*

*அவன், ஒரு குருடனை நடத்தும் கண்காணியைப்போல் இருக்கிறான்.*

*அவன், தேவனுடைய உன்னதத்தில் வாழ்ந்து, தாழ்விடம் இறங்கி வந்து "கர்த்தர் சொல்லுகிறார்" என முழங்குவான்!*

*அவன் தேவனை அறிந்திருக்கிறான்! பாரபட்சமற்ற தெய்வ நியாயத்தீர்ப்பையும் அறிந்திருக்கிறான்!*

*அவன் "கர்த்தரோடு இனிமையான தனிமையில்" ஜீவிப்பான்!*

*அவனுடைய செய்தி "மனந்திரும்பி தேவனோடு ஒப்புரவாகுங்கள்! இல்லையென்றால்.....!" என்ற எச்சரிப்பாயிருக்கும்!*

*அவன் கொண்டு வரும் சத்தியம் ஓங்காரமாய் ஒலிக்கும்..... அது, வெறும் சத்தமாய் இருப்பதில்லை!*

*அவன் உயிரோடு இருக்கும் காலத்தில் கனம் செய்யப்படாமல், மரித்த பிறகே கனம் செய்யப்படுவான்!*

*அவன் ஓர் எரிமலையாகவும், அவனுடைய வார்த்தைகள் அக்கினியாகவும் இருக்கும்!*

அவன் மனுஷர்களுடைய முகத்தை பார்ப்பதற்கு முன்பாக, தேவனைக் காணவே ஓடித் தேடுவான்!

தேவனிடம், தன்னை கவனமாய் சுத்திகரித்துக்கொள்ளுவான்!

அவன் உன்னதமானவரின் மறைவில் ஒளிந்து கொள்ளுவான்! தன் சொந்த வாழ்க்கையிலோ 'எதையும்' மறைத்து வாழ மாட்டான்!

அவன் சுபாவத்தில் மென்மையானவன். ஆனால் தன் இயற்கை சுபாவத்திற்கு அப்பாற்பட்டு, நம்மை கிறிஸ்துவிடம் நடத்தும் ஓர் தலைமை ஆசான்!

அவன் நடத்தும் வகுப்பில் 'கொஞ்சம் பேர்களே' தேர்ச்சி அடைவார்கள்!

அவன், பல நாட்கள் மனுஷர்கள் முன்பு நடப்பான்! ஆனால், தேவன் முன்பாக பல வருடங்கள் நடந்திருப்பான்!

அவனுடைய இருதயம் ஆவிக்குரிய உரம் கொண்டது!

அவன், வாஞ்சையும் உறுதியான நோக்கமும் நிறைந்தவன்!

அவன் தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, மனுஷரால் புறக்கணிக்கப் படுவான்!

கடந்த பல்லாண்டுகளாக, சுவிசேஷ ஊழியத்திற்கென கோடி கோடியாய் செலவழிக்கப்பட்டு விட்டன. ஆயிரக்கணக்கான சுவிசேஷ செய்திகள், ரேடியோ அலை மூலமாக தினசரி புறப்பட்டுச் செல்கின்றன. கன்வென்ஷன் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன......

**ஆனால், துயரம் என்னவெனில்.... 'பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள்' என்ற அழைப்பை கேட்டு வெளியே வந்தவர்கள், வளர்ச்சி இல்லாமல் தேங்கி விட்டார்கள்!**

கூட்ட ஒருங்கிணைப்பாளர்கள், திறமையான பிரசங்கிகள் என பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் முளைத்துவிட்டன. இவை அனைத்தும் இருந்தும் மெய்யான 'தீர்க்கதரிசியை' தேடிப் பார்த்தும் காண முடியவில்லையே! பரிசுத்த ஸ்தலத்திலிருந்து, நாள்தோறும் புதுப்பிக்கப்பட்டு கிளம்பிவரும் 'அக்கினி பிளம்பான' மனிதர்கள் எங்கே? இன்றைய சுவிசேஷ கிறிஸ்தவ உலகில் 'மிகப் பெரிய வெற்றிடம்' ஏற்பட்டு விட்டதைப் பாருங்கள்! இன்று நம் மத்தியில் எல்லாம் இருப்பதுபோல் காணப்பட்டு 'ஓர் தீர்க்கதரிசியோ' காணாமல் போய் விட்டார்!

**ஓர் தீர்க்கதரிசி, யோவான் ஸ்நானகனைப் போலவே எளிமை கொண்டவன்! இன்றைய 'நாகரீக கிறிஸ்தவமும் தேங்கிவிட்ட சபை குழுவுமாகிய' வனாந்திரத்தில் அவனுடைய சத்தம் எக்காளமாய் தொனிக்கும்!**

*அவன் அப்போஸ்தலனாகிய பவுலைப் போன்று சுயநலமற்றவன்!*

*அவன் "ஒன்றையே நான் செய்கிறேன்" எனக் கூறி, அதற்காகவே ஜீவிப்பவன்!*

*அவன் 'பிரசங்க திறமை கொண்டவன்' என்ற கனத்தை புறம்பே தள்ளுவான்!*

*அவன் தன்னையே தாழ்த்தி! தனக்கானதை தேடவும், தன்னை உயர்த்திக் காட்டவும் மறுத்தவனாய்! சுயநீதி மறுத்தவனாய்! சுய மகிமை நாடாதவனாய்! பதவி மோகம் இல்லாதவனாய்! எப்போதும் இருப்பான்.*

*அவன், யாதொன்றையாகிலும் கூறி, ஜனங்களைத் தன்னண்டை ஈர்க்க மறுத்து, மனுஷர்களைத் தேவனிடத்தில் ஈர்க்கப்படும் படியான வார்த்தைகளையே பேசுவான்!*

*அவன், பரிசுத்த தேவனின் சிங்காசன வாசஸ்தலத்திலிருந்தே ஒவ்வொரு நாளும் புறப்பட்டு வருவான்! அங்கிருந்தே அந்த நாளுக்குரிய கட்டளைகளைப் பெற்று வருவான்!*

*அவன், பணத்தினாலும், உலகப்பொருளின் கவர்ச்சியினாலும்* **செவிடாகிப்போன** *லட்சோப லட்சம் மக்களின் காதுகளைத் திறப்பான்! அவன் 'இந்த நூற்றாண்டு ஜனங்கள்' காணாத ஒன்றில் தரிசனம் பெற்றவனாய் இருக்கிறபடியால், அதை அவன் உரத்த சத்தமாய் பிரகடனப்படுத்துவான்! தேவன் நம் அனைவருக்கும் இரக்கம் செய்து, நம் ஸ்தலத்தில் மெய்யான தீர்க்கதரிசிகளை அனுப்புவாராக!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

---

### சபை ஊழியத்திற்கு 'அபிஷேகமும் உத்தமமும்' வேண்டும்!

**செ**ன்னை இராயபுரம் சபைக்கு நான் போதகரானபின்பு ஆராதனைகளை மிகுந்த உத்தமத்தோடு ஒழுங்காய் நடைபெற்று வந்தது! **கிறிஸ்துவே** என் ஊழியத்தின் நோக்கமாயிருந்தார். வேதாகமத்தில் ஆயிரமாயிரமான விஷயங்களும், வாக்கியங்களும் நிறைந்துள்ளது! ஆகவே, எங்கிருந்தும் எதையும் எடுத்துப்பேசலாம்.... பிரசங்கம் முடிந்துவிடும் என்பதல்ல என்நோக்கம்! *அப்போஸ்தலர்* ஊழியத்தில் பிரவேசித்து, எங்கும் சென்று கிறிஸ்துவையே பிரசங் கித்தது போல, நானும் அருமை இரட்சகரைப் பற்றியே இடை விடாமல் எப்பொழுதும் பிரசங்கித்து, **அவரை மகிமைப்படுத்தி** வந்ததால், கர்த்தருடைய சமூகமும் ஆசீர்வாதமும் சபையாரோடிருந்தது!

**ஆராதனை ஆரம்ப முதல் முடிவுவரை, சகலமும் ஆவியானவரின் பலத்தோடு நடத்தப்பட்டு வந்தது. வீண் வார்த்தைகளுக்கோ, உதவாத விளம்பரங்களுக்கோ ஆராதனையில் இடங்கொடுப்பதில்லை.**

ஆண்டவர் கற்பித்தபடி ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள நாடினோம். ஒவ்வொரு ஆராதனையிலும், சபையாரில் சிறியோரும் பெரியோரும் ஆசீர்வாதம் பெற்று ஆவிக்குரிய முகமலர்ச்சியோடு வீடு திரும்புவார்கள்! கடமைக்காகவோ, 'வழக்கமானது!' என்பதற்காகவோ ஒரு காரியமும் செய்யப்பட வில்லை! உயிரற்ற சொரூபத்தையல்ல, அன்பு நிறைந்த பரம பிதாவையே நம்பியிருக்கும் எங்களை, அவர் அபரிதமாய் ஆசீர்வதித்தார்!

**ஜனங்கள் பலவித அனுபவமுள்ளவர்களாயிருப்பார்கள். சபையை நடத்தும் போதகர் கர்த்தருக்குள் பிழைக்கிறவரும், ஆவியின் நிறைவு பெற்றவருமாயிருக்க வேண்டும்! சபையின் வாழ்வோ, தாழ்வோ ஊழியனைத்தான் பொறுத்திருக்கிறது!**

ஆராதனைக்கு வருகிறவர்கள் கவலை துக்கங்களோடும், குடும்ப விசாரங்களோடும், பாவபோராட்டத்தோடும், பல சிக்கலான விஷயங்களோடும் வருவார்கள். ஜெபத்தின் மூலமாகவும், பிரசங்கத்தின் மூலமாகவும், பக்தியான ஆராதனை பாட்டுகள் மூலமாகவும் கர்த்தர் அவர்களோடு பேசி, அவரவருக்கு வேண்டிய ஆசீர்வாதம், ஆறுதல், சமாதானத்தைக் கொடுத்து அனுப்புகிறார். அவர்கள் தங்கள் வீடுகளுக்குப்போகும்போது: நமது வீட்டுக் காரியங்களை நாம் நமக்குள்ளே பேசிக்கொண்டோமே; அது நம் ஊழியருக்கு எப்படித் தெரியும்? பிரசங்கத்தின் மூலமாய் நமது கவலையை நீக்கிவிட்டாரே! என்றெல்லாம் பேசிக்கொள்வார்கள். ஆத்ம ஆசீர்வாதங்கள் மட்டுமல்ல, ஜெபத்தைக் கேட்டு பல்வேறு நோயாளிகளையும் குணமாக்கியிருக்கிறார்! தமது சமூகத்தை ஆவலோடும் நம்பிக்கையோடும் தேடிவரும் மக்களை ஆண்டவர் தமது ஊழியக்காரன் மூலமாய் சந்தித்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். **இது எப்படி ஆயிற்று? ஊழியனுக்கும் ஆண்டவருக்குமுள்ள சம்பந்தம் சரியாயிருக்க வேண்டும்.** சபையார் பெருகினால், காணிக்கை பெருகும் என்ற நோக்கத்தோடு ஊழியம் செய்யாமல், அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, இரட்சிப்பின் ஆசீர்வாதத்தை அனுபவிக்க வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தோடு நாம் உழைத்திட வேண்டும்! இராயபுரம் சபையில் **நாங்கள் பணத்தைப் பற்றிப் பேசியதேயில்லை!** விற்பனைகள், வேடிக்கைகள், ஏலங்கள் வைத்து பணம் சேர்த்ததும் இல்லை! நாங்கள் ஆண்டவரையே பிரதானமாகத் தேடினோம்!

ஆண்டவரே தமது ஊழியத்தைப் பராமரித்து வந்தார். யார் யார் என்ன பணம் கொடுப்பார்கள் என்பது எங்களுக்குத் தெரியாது! அதை நாங்கள் நினைப்பதே இல்லை.... பணம் கொடுப்பவர்களை ஒரு விதமாகவும், பணம் கொடுக்க முடியாதவர்களை வேறு விதமாகவும் நாங்கள் நடத்தியதில்லை. எங்களுடைய ஊழியம் எல்லாருக்கும் சமம்! சொல்லப்போனால், அதிகப் பணம் கொடுப்பவர்களை சந்திப்பதைப் பார்க்கிலும், ஏழைகளையே அதிகமாய் சந்தித்து ஆறுதல்படுத்தி ஜெபித்தோம்! இதனாலே, நாங்கள் கைவிடப்பட்டுப் போகவில்லை. இவ்வாறு நீண்டகால ஊழியத்தால் இரட்சிக்கப் பட்டவர்களும், கிறிஸ்துவுக்கு சாட்சியாக ஊழியம் செய்து வருகிறவர்களுமே எங்களிடம் பெருகினார்கள்! கர்த்தருக்கு துதியுண்டாகட்டும்!

– பரமானந்தம் ஐயர்

---

## ‘ஒளிந்து உலாவும்’ கேடான அன்பற்ற சுபாவம்!

‘**த**ன்னை ஒரு ஆவிக்குரியவன்’ என தனக்குத் தானே மேன்மைப் படுத்திக்கொண்டவர்களும், மற்றவர்களால் ‘உயர்ந்த ஆவிக்குரியவன்’ என போற்றப்பட்டவர்களும்கூட, தங்களுக்குள் ‘கொடிய தீமையை’ பேணி பாதுகாத்துக் கொண்டிருக்க முடியும்! அவனைச் சுற்றியுள்ள ஜனங்களின் கண்களுக்கு அந்த குறைகள் தெரிவதில்லை. ஊடுருவப் பார்க்கும் **பரிசுத்தாவியின் கூர்மையான கண்களுக்கு** மாத்திரமே அவனுடைய குறை மறைந்திருப்பதில்லை! ஏனெனில், மற்றவர்களைப் போல் மாயத்தோற்றத்தில் கணக்குப் பார்க்காமல், அவர்களின் உள்ளத்தில் மறைந்திருப்பதையே பரிசுத்தாவியானவர் பிரதிபிம்பமாய் காண்கிறார்!

இதை என் சொந்த அனுபவத்தில் கண்ணுற்றே, இவைகளை அறிந்திருக்கிறேன். ‘மறைந்திருக்கும் குறைகள்’ என்பது, கிரியைகளை வைத்தோ அல்லது வார்த்தைகளை வைத்தோ வெளிப்படாமல் இருக்கலாம். அதை நம் கண்கள் கண்டும் இருக்காது! நம் காதுகள் கேட்டும் இருக்காது! ஆனால் மெய்யான ஆவிக்குரிய முதிர்ச்சியை மட்டுப்படுத்தும் நடமாட்டம் நம் கண்கள் கண்டும், நம் காதுகள் கேட்டும் இருக்காத பகுதியை ஆட்கொண்டே நடமாடுகிறது!

**ஆவிக்குரிய கனியாகிய ‘அன்பென்னும் குணமே’ உங்களின் மறைவான ஜீவியத்தை ஆட்கொண்டு நடக்கிறது!** அதேபோல், உங்கள் ஜீவியத்தின் மறைவில், உங்களைச் சார்ந்த சிலரைக் குறித்து ‘அன்பில்லாத குணம்’ கொண்டிருந்தால்.... அதுவே, கொஞ்சம்

*கொஞ்சமாய் உங்கள் ஆவிக்குரிய தன்மையைக் கெடுத்துவிடும்! சில சமயங்களில், சிலருடைய ஆத்துமா* **கறைப்பட்டவுடனே** *தங்கள் நிலையைக் குறித்து உணர்ந்து திருந்தி விடுகிறார்கள். இன்னும் சிலருக்கோ* **மறைந்து உலாவும் அவர்களின் தொடர்ச்சியான அன்பற்ற தன்மை** *"சீர்ப்படுத்த முடியாத தீமையை" அவர்களுக்குள் கொண்டு வர காரணமாகி விடுகிறது!*

*நமக்குள் ஒளிந்திருக்கும் அன்பற்ற தன்மையை நாம் உணர் வடையத் தொடங்கிவிட்டால், நம்மை எப்போதும் கிருபாசனத் தண்டை வைத்துக் கொள்ளவே விரும்புவோம். "ஓ கர்த்தாவே, என் ஜீவிய மறைவில் 'மறைந்து உலாவும்' யாரைக் குறித்த அன்பற்ற தன்மை எதுவாயிருந்தாலும், அதை எனக்கு மன்னியும்!" என்றே, தாழ்த்தி கெஞ்சி நிற்போம்!*

**"அன்பே பெரியது" என்ற உயர்ந்த குணத்திற்கு எத்தனை விரோதம் இருக்கிற தென்பதை நான் அறிந்து கொண்டேன்!**

*இந்த முக்கியமான 'அன்பற்ற குணத்திலிருந்து என்னைத் தப்புவித்து காத்தருளும்' என ஓயாது வேண்டி நிற்பதே, 'கல்வாரி அன்பை' ருசித்த எல்லா தாசர்களுக்கும் ஏற்ற ஜெபமாய் இருக்கிறது!*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## 'உங்களிடம் உள்ளதை' கர்த்தரிடம் அர்ப்பணியுங்கள்!

*ஞாயிறு பள்ளியில் D.L. மூடி காட்டிய சிரத்தையான உத்தமமே, திரளான மக்களை கிறிஸ்துவிடம் சேர்க்கும்* ***மூடிப்* பிரசங்கியராய்** *மாற்றியது!*

*மூடி தமது ஞாயிறு வேதாகம பள்ளிக்கு, மாணவ மாணவிகளைக் கொண்டு வந்து, அவர்களை ஆண்டவரின் பிள்ளைகளாக்க பேரார்வத் துடன் தெருக்களில் அங்கும் இங்கும் அலைந்து திரிவார்! ஒரு உதாரணம் பாருங்கள்: சிக்காக்கோ நகரில், ஒரு சிறு பெண் மூடியின் வேதாகம பள்ளிக்கு வருவதாகவும் அதற்கு தனது தாயாரின் அனுமதியை மூடி பெற்றுத்தர வேண்டும் என்றும் அவரைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று.... வீட்டுக்கு வெளியே தெருவின் ஒரு மூலையில் அவரை சற்று நேரம் காத்திருக்கும்படியாக கூறிவிட்டு சென்றவள், வீட்டைவிட்டு வெளியே வரவே இல்லை! ஏழை மனிதன் 3 மணி நேரம் பொறுமையோடு காத்திருந்தும், அவள் வந்தபாடில்லை! அந்த சிறுமியின் வீடு எது? என்றும் அவர் அடையாளம் காண முடியவில்லை. மூடி துக்கத்துடன் போய் விட்டார்! கொஞ்ச நாட்களுக்குப் பின்னர் அந்த சிறுமியை அவர் தெருவிலே பார்த்தார்.*

அவரைப் பார்த்ததும், அவள் ஓட்டம் பிடித்தாள்! அவரும் அவளைப் பின் தொடர்ந்து ஓடினார். அங்கே ஒரு குதிரை வண்டி நிறுத்தப் பட்டிருந்தது. அதைச் சுற்றி சுற்றி அங்குமிங்குமாக அவள் மூடியை ஏமாற்றுக் காட்டி ஓடிக்கொண்டிருந்தாள். அதற்கும் மூடி மசிய வில்லை. இப்பொழுது அவள் ஒரு சாராய கடைக்குள் சென்று மாடிப் படிகளில் ஏறி ஓடிவிட்டாள். மூடியும் படிக்கட்டுகள் வழியாக ஏறி மாடியில் பார்த்தபோது சிறுமியை காணவில்லை. அங்கிருந்த கட்டிலின் கீழே பார்த்தபோது அவள் அங்கு ஒளிந்துக் கொண்டிருந்தாள். மூடி வேர்த்து விறுவிறுக்க மூச்சு வாங்கிய நிலையில் கட்டிலின் கீழாக ஊர்ந்து சென்று அவளது காலைப்பிடித்து வெளியே இழுத்தார். அவளை எப்படியோ அன்பாகப் பேசி, தனது வேதாகம பள்ளிக்கு ஒழுங்காக வரச்செய்து விட்டார். மேற்கண்ட அசாதரண மான நிகழ்வைக் குறித்து, அவரது நண்பர் பேசும்போது "மூடி பிரசங்கியார் ஒரே ஒரு சிறுமியை அவளது கட்டிலின் கீழிருந்து இழுக்க வில்லை..... **அந்த சிறுமியின் முழுக்குடும்பத்தையே** பரலோகத்துக்கு இழுத்துக்கொண்டு வந்து விட்டார்" என்று மகிழ்வுடன் குறிப்பிட்டார்!

**இந்த *மூடியை* "என்சைக்ளோ பீடியா" என்ற உலக ஆராய்ச்சி நூல் விவரித்துக் கூறும்போது "இரண்டு கோடி மக்களை" நரகத்தின் ஜனத்தொகையை காலியாக்கி மீட்டெடுத்தவர் எனக் குறிப்பிட்டுள்ளது!**

இந்த மூடி, நம் யாவருக்கும் ஓர் சவாலாய் இருக்கிறார். நாம் வாழும் கொடிய இக்காலத்தில், **கர்த்தருக்கென அர்ப்பண ஊழியம்** செய்வோர் அநேகர் இல்லை! "என்னால் இயலாது" என்பதே இவர்களின் கூற்று. உங்களிடம் இருப்பது, எவ்வளவு குறைவாய் இருந்தாலும், அதைக் கொண்டு இயேசு உங்களைப் பயன்படுத்த முடியும். வாலிப பிராயத்தில் நவ-இங்கிலாந்து தேசத்தில் D.L.மூடியை தேவன் தொட்டார். ஆங்கிலேய நாட்டில் பிறந்த மூடி தெளிவான ஆங்கிலம் பேசத் தெரியாதவர்!! தேவனோ அவரிடம் "உன் கையில் என்ன உள்ளது?" என்று கேட்டு விட்டார். செருப்புத் தொழில் செய்த மூடியோ "என்னிடம் வெறும் செருப்புகள்தான் உள்ளது" என பதில் கூறினார். இதே போன்ற கேள்வியைத்தான் வில்லியம்கேரியிடம் தேவன் ஒருமுறை கேட்டார். செருப்பு தைக்கும் தொழிலைக் கொண்ட அவர், மூடியைப் போலவே "என்னிடம் வெறும் செருப்புகள்தான் உள்ளது" என பதில் கூறினார். அதற்கு ஆண்டவர் "அவைகளை என்னிடத்தில் கொடு" என கட்டளையிட்டார்!

நம்மிடம் இருப்பது, வெறும் 'செருப்பாய்' இருந்தாலும் அல்லது கணிணி பொறியாளர்கள் செய்திடும் **'மைக்கேரா சிப்ஸ்'** ஆனாலும்,

*உங்களிடம் இருப்பதை கர்த்தரிடம் கொடுத்துவிட்டால், அதை அவர் பயன்படுத்த மாட்டாரோ? அவ்வாறு தங்களிடம் உள்ளதை முற்றிலும் கொடுத்தவர்களை, தேவன் ஆசீர்வதிப்பது மாத்திரமல்லாமல், அவர்கள் மூலமாய் பல்லாயிரம் ஜனங்களை ஆசீர்வதிப்பார் என்பது, அன்றும்.... இன்றும்.... என்றும் மாறாத உத்தம சத்தியமாகும்!*

*– D. L. மூடி*

---

## காணுதே அதோ, இன்ப கானான்!

**வி**சுவாசிக்காதவர்களே, வாக்குதத்தம் செய்யப்பட்ட பாலும், தேனும் ஓடுகிற கானான் பூமியை சுதந்தரிக்கவில்லை! (எபி.3:19). புதிய உடன்படிக்கையில் நமது பாக்கியம் "நித்திய ஜீவனைக் குறித்த" வாக்குதத்தமேயாகும்! அதை சுதந்தரிப்பதற்கு நாம் பெறும் விசுவாசமே "அருமையான விசுவாசம்" என போற்றப்படுகிறது! (தீத்து.1:3, 2பேதுரு2:1). **இச்சையினால் இவ்வுலகத்திலுண்டான கேட்டிற்குத் தப்பியே** அந்த நித்திய ஜீவனாகிய "திவ்விய சுபாவத்தை" சுதந்தரிக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்! நம் விசுவாசம் பெருக, பெருக, நம் ஜீவியத்தில் 'கானான் தேசத்தின்' எல்லை பெருகிக்கொண்டே செல்லும்! முடிவில் வாக்குதத்தம் செய்யப்பட்ட அந்த இன்ப கானான், நமது சொந்தமாகும்!

ஒருமுறை, அப்போஸ்தலர் இயேசுவிடம் வந்து "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ண வேண்டும்" என விண்ணப்பித்தார்கள் (லூக்கா.17:5). ஆனால், அவர்கள் ஜீவிய எல்லை முழுவதும் "காட்டத்தி மரமே" வேர் விட்டு இருந்தது! அந்த காட்டத்தி மரம் கொஞ்சம் சொஞ்சமாய் பிடுங்கப்பட்டால் மாத்திரமே, வாக்குதத்த பூமி விஸ்தாரமாகி அங்கு, "பாலும் தேனும் ஓடுகின்ற அல்லது திவ்விய சுபாவமாகிய ஜீவன் சுதந்தரிக்கப்பட முடியும்" என இயேசு கூறினார்! ஆம், அது **'கடுகு விதை' அளவு விசுவாசத்தில் துவங்கி,** விசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்கு வளர்ந்து, விஸ்தாரம் அடைந்து விடும்!

நம் மாம்சத்தில் வேர்விட்டிருக்கும், பாலிய இச்சை தொடங்கி, கோபம், பகை, மன்னியாத சுபாவம் ஆகிய அனைத்தையும் சேர்த்த கூட்டுத்தொகையான பாவம் "தனக்கானதைத் தேடும்" பாவமேயாகும்! **தனக்கானதைத் தேடுவது "பிறர் எனக்கு என்ன செய்ய வேண்டும்?" என்ற எதிர்பார்ப்பேயாகும்!** இதற்கு எதிர்மறையான கானான் பூமியின் சுபாவமோ 'தனக்கானதைத் தேடாத' 'அடிமையின் ரூபமாகிய' முடிவுபரியந்தம் பணிவிடை செய்யும் தாழ்மையான சுபாவமாகும்! நாம் இயேசுவோடு பிரவேசித்திட விரும்பும் இந்த இன்ப கானானின்

*மேன்மையை, இதே அதிகாரத்தில், இயேசு ஓர் உவமை மூலம் புலப்படுத்தினார்:*

"நம்மில் ஒருவன் உழுது, வயலிலிருந்து வரும்போது, எஜமான் அவனை நோக்கி நீ முன்புபோய் சாப்பிட்டு வா என்று அவனுக்குச் சொல்வானோ? என கேட்டார். அதற்கு நாம் யாவரும் கூறும் விடை 'கண்டிப்பாய் அப்படித்தான் சொல்வான்' என்றே கூறுவோம். அல்லது, அந்த ஊழியக்காரன், இவ்வளவு களைத்து பணி செய்து வரும் எனக்கு அப்படியே சொல்வார்! என அந்த ஊழியக்காரன் எதிர்பார்த்திருப்பான்! அவன் எதிர்பார்ப்போ நடக்கவில்லை! அதற்கு பதிலாய், நீ எனக்கு சாப்பாடு ஆயத்தம் செய் என்றே அவன் 'எதிர்பார்ப்பை' எஜமான் தகர்த்துப் போட்டார்! இப்போது, சாப்பாடு ஆயத்தம் செய்த அந்த அடிமை, சாப்பாடு தயாரித்தவுடன், எஜமான் தன்னைப் பார்த்து 'வா, சேர்ந்து சாப்பிடலாம்' என்று சொல்வார் என எதிர்பார்த்தான்! ஆனால் எஜமானோ "நான் போஜனம்பண்ணும்படி பணிவிடை செய்" அதற்கு பின்பு.... மீதியானதை, நீ புசித்து குடிக்கலாம்! என மீண்டும் அவன் எதிர்பார்ப்பை தகர்த்துவிட்டார்! இப்போது மீதியை சாப்பிட்டு எழுந்த அந்த உண்மையான ஊழியனுக்கு, எஜமான் "உபசாரம்!" அல்லது "நன்றி" எனக் கூறுவாரோ? என்ற கேள்விக்கு அந்த ஊழியன் தொடங்கி, நாம் வரை "ஆம், நன்றி சொல்வான்" என்றே பதில் கூறுவோம்! ஆனால், இங்குதான் இந்த உவமையில் காணும் அடிமையாக, இயேசு தன்னை வைத்தே குறிப்பிட்டு "அப்படி நன்றி சொல்லமாட்டான்" என்ற கிறிஸ்துவின் சிந்தையை வெளிப்படுத்தினார்! இப்போது "நன்றிகூட" எதிர்பார்க்கும் எதிர்பார்ப்பு தகர்க்கப்பட்டுப்போனது! தொடர்ந்து, தன் ஊழியர் களுக்கு இயேசு புத்திகூறி, இவ்வாறு "தனக்கானதைத்தேடும்" எதிர்பார்ப்பை நீங்களும் தகர்த்துப் போடுங்கள் என கூறினார்!" (லூக்.17:7-10).

*"மாம்சமும் அதன் ஆசை இச்சைகளும்" போன்ற பாவங்களை விட, ஒருவருக்கொருவர் எதிர்பார்க்கும் 'தனக்கானதைத் தேடும்' எதிர்பார்ப்பே குடும்பத்திலும், சகோதரத்துவத்திலும், சபையிலும், இணக்கமற்ற பகையும், பிளவும் ஏற்படச்செய்கிறது!*

*ஆகவே, இதுபோன்ற 'தனக்கானதைத்தேடும்' எதிர்பார்ப்புகள்* (Demand) *பரிசுத்தாவியின் வல்லமையால் சிலுவையில் அறையப்பட்டு, "அந்த காட்டத்தி மரத்தை" வேரோடு ஒவ்வொன்றாய் பிடுங்கி வாழ வாழ, நம் வாக்குத்தத்த கானான் பூமி விரிவடைந்து, ஓர் நாளில் நம் கண்கள்* "**காணுதே அதோ, இன்ப கானான்**" *என மகிழ்வுடன் ஆனந்திக்கும் பாக்கியம் பெறுவோம்! கொடிய 'பாதாளமாகிய' இந்த சுயம், நம்மையும், நம் குடும்பத்தையும், நம் சபையையும் ஒருக்காலும் மேற்கொள்ள முடியாத உன்னத நிலைக்கு கட்டப்படுவோம்!*

– *T.ரத்தினகுமார்*

# கிரஹாம் ஸ்டெய்ன்ஸ்,

## தெய்வ அன்பிற்கு 'அக்கினி ஜுவாலை' ஆனார் (1949 - 1999)



ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லேண்டு நகரிலிருந்து தேவன் தெரிந்து கொண்ட பாத்திரமே இந்த கிரஹாம் ஸ்டெய்ன்ஸ்! 1965-ம் ஆண்டு, தனக்கு முழுநேர பணி செய்யும்படி இந்த வாலிபனை தேவன் அழைத்தார்! தீவிர ஜெப வாஞ்சை நிறைந்த இந்த இளைஞன் தேவ அழைப்பிற்குத் தன்னை ஒப்புக் கொடுத்து, ஒரிஸா மாநிலத்தின் பரிபாடா என்ற ஊரில் உள்ள குஷ்டரோக மறுவாழ்வு இல்லத்திற்கு ஊழியம் செய்திட இந்தியா வந்தார்! இவரது மனைவி கிளாடிஸ், தன் வாலிப 13-ம் வயதிலேயே கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்! ஆஸ்திரேலியாவில் ஒரு நர்ஸாக பணியாற்றிய அவர், தன் கணவரோடு இணைந்து முழு நேர ஊழியம் செய்திட 1981-ம் ஆண்டு தேவ அழைப்பை பெற்றார்.

ஒரு முறை, ஆஸ்திரேலியாவிற்குச் சென்ற ஸ்டெய்ன்ஸ் குடும்பத்தினர் குறைந்த நாட்களில் ஒரிஸாவில் உள்ள தங்கள் பரிபாடா இல்லத்திற்கு திரும்பி வந்து "இந்த குஷ்டரோக ஆசிரமமே எங்கள் சொந்த தாய் வீடு!" எனக்கூறி மகிழ்ச்சியோடு கர்த்தருக்கு ஊழியம் செய்தார்கள்.

பரிபாடாவின் "மனோகரபூர்" என்ற கிராமத்தில் 1999-ம் ஆண்டு ஜனவரி 22-ம் தேதி நடந்த "மலைப்பிரதேச வருடாந்திர முகாமிற்கு" கிரஹாம் ஸ்டெய்ன்ஸ் தன் இரண்டு மகன்கள் பிலிப்புவையும், தீமோத்தேயுவையும் அழைத்துக் கொண்டு, பங்கேற்றார். களைத்துப் போன தன் புதல்வர்கள் பிலிப்புவையும், தீமோத்தேயுவையும் முகாமிலிருந்த ஒரு வேனில் படுக்க வைத்தார்.

ஆனால், அந்த காரிருளான நேரத்தில், மற்றொரு குழு தாராசிங் என்பவனுடைய தலைமையில் "மனோகரபூருக்கு" வந்து சேர்ந்தனர். அவன் கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவ மிஷனரிகளையும் கடும்பகையாக பகைத்தான். அந்த 12.30 அதிகாலை நேரத்தில் கொலை வெறி கொண்ட அந்த கும்பல், ஒரு சூலாயுதத்தை கிரஹாமின் உடம்பில் பாய்ச்சியது. மற்ற இரண்டு சூலாயுதங்கள், செங்குருதியில் கிடந்த அந்த இரண்டு பிஞ்சு உடல்களில் பாய்ந்தது. 'கிறிஸ்து இயேசுவே!' என்ற குரலோடு, துடித்து மடிந்து கொண்டிருந்த தன் இரண்டு புதல்வர்களையும் ஸ்டெய்ன்ஸ் தன் கரங்களால் அணைத்து இறுகப் பற்றிக் கொண்டார். இத்தனை கொடூரத்திற்குப் பிறகும் ஆத்திரம் தணியாத தாராசிங்கின் கும்பல், வைக்கோல் சுருள்களை வேனின் அடிப்பாகத்தில் திணித்து வேனிற்கு தீ வைத்தனர். அந்த மூன்று தியாக உள்ளங்களும் கருகி சாகும் வரை அந்த கொடூர கும்பல் அந்த வேனைச் சுற்றி நின்றார்கள்.

கண்ணீரில் மூழ்கியிருந்த கிளாடிஸ் கூறும்போது: "கூடி இருக்கும் அனைவருக்கும் நான் சொல்ல விரும்பும் செய்தி என்னவெனில், நான் கசந்து போகவில்லை! யார்மீதும் கோபமாய் இல்லை! கொலையாளிகளின் அனைத்து வன் செயல்களையும் நான் மன்னிக்கிறேன்! ஆகிலும் 'அவர்களது பாவங்களையோ' இயேசு மாத்திரமே மன்னித்திட முடியும். பகை ஒன்றே தீ கொளுத்தப்படட்டும்! கிறிஸ்துவின் அன்போ சுடர் ஒளி பிளம்பாய் பற்றிப் படரட்டும்!" என கேட்பவர் நெஞ்சங்கள் அதிர கூறினார்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## ஓ வாலிபனே, இரட்சகர் ஒருவரே உன் தஞ்சம்!

அநேக ஆண்டு காலங்களுக்கு முன்பாக, நான் ஜெர்மனி நாட்டில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது புகழ்பெற்ற சித்திரக்கலைக் கூடங்கள் சிலவற்றைப் பார்வையிட்டேன். அந்நாட்டின் *முனிச்* என்ற பட்டணத்திலுள்ள ஒரு கலைக்கூடத்தில், நான் கண்டதொரு சித்திரத்தின் காட்சி என் மனதில் ஒரு ஆழமான பரவச உணர்வை உண்டாக்கிவிட்டது. புயற்காற்று ஒன்றின் வரவை முன்னறிவிக்கும் காட்சிதான் அது:

கரிய மழை முகில்கள் ஒன்று திரண்டு, உருண்டு எழுந்து, அச்சுறுத்துகின்றதும், வரப்போகும் கடும் புயலுக்கு முன்னர் வீசும் காற்றின் வேகத்தில் மரங்கள் தலை விரித்து ஆடுவதும்! ஆடு மாடுகளும், குதிரைகளும் சீறிப் பாய்ந்து வரும் புயற்காற்றின் வேகம் கண்டு பயந்து, வயல் வெளிகளின் குறுக்கும், நெடுக்குமாக, மிரண்டு விரைந்து ஓடுகின்றதும்! ஒரு சிறிய கூட்டம் ஆண்கள், பெண்கள், சிறுபிள்ளைகள் கூனிக் குனிந்த நிலையில், பயத்தால் முகம் வெளுத்தவர்களாய், பார்வை, நடை செயலாற்றல், ஒவ்வொன்றிலும் திகிலும், கிலியும் கொண்ட மக்களாகக் **கொடும் புயலுக்கு முன்னால் ஒரு மறைவிடத்தைத் தங்களுக்கெனத் தேடிக் கொண்டு ஓடுபவர்களின் காட்சியாகச் சித்திரக்காரர் அப்படத்தைத் தீட்டியிருந்தார்!**

ஓ வாலிபனே! வாழ்வின் மெய்யான புகலிடம் எது தெரியுமா? உன் பாவ வாழ்வைச் சுற்றி சூறாவளியாய் உன்னை அழித்திட வரும் பாவத்தின் கொடூரத்திலிருந்தே நீ புகலிடம் தேட வேண்டும். உன்னை சீறும் அழிவான வாலிபம், பல்வேறு பாவ ரோகங்களிலிருந்தும், பழக்கத்திலும் உன்னை விடுவித்து இரட்சிக்கும், **இரட்சக பெருமானே, உனது புகலிடம்!** தஞ்சம் கொள், அவரே என் இரட்சகர் என தஞ்சம் கொள்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.